# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,466 — 1939 ம் ஞு ஆடிமீ 21 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டம்.

ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டத்தின் (133 ம் அதிகாரம்) 2 ம் பிரிவின்கீழ் நான் பெற்ற அதிகாரத்தைக்கொண்டு, இலங்கைத் தேசாதிபதியாகிய அந்திரூ கொல்டிக்கொற் ஆகிய நான், 1939 ம் ஆண்டு ஜூலைமீ தொடங்கும், தென் மாகாண மாத்தறை டிஸ்திறிக்கிலுள்ள தெவுந்திற ஸ்ரீ விஷ்ணு மஹா தேவாலயத்திற்கு, வழமையான யாத்திரையை எதிர் நோக்கி இந்த விளம்பரத்தினால் கீழ்க்காட்டும் பிரமாணங்களை ஆக்குகின்றேன்.

ஏ. கொல்டிக்கொற்,
தேசாதிபதி.

கொழும்பு, 1939 ம் ஞு ஜூலைமீ 18 ந் ௳.

தெவுந்திற ஸ்ரீ விஷ்ணு மஹா தேவாலயத்திற்கு யாத்திரைபோதல்.

பிரமாணங்கள்.

1. யாத்திரைக்கு சற்றே முன் அல்லது யாத்திரை காலத்தில் தெவுந்திருவில் அல்லது அதற்கு அடுக்கவிருக்கும் ஊர்களில் தொற்று நோய், பரப்பும் நோய், அல்லது பெருவாரி நோயுண்டுபடுமாயின், அல்லது உதவி அரசாட்சி ஏசண்டரின் அபிப்பிராயப்படி யாத்திரை காலத்தில் தெவுந்திருவுக்குப் பரம்பக்கூடிய விதமாகத் தென் மாகாணத்திலுள்ள வேறு எவ்விடத்திலும் அவ்வித நோய் உண்டுபடுமாயின் யாத்திரையைத் தடுத்து அல்லது யாத்திரையை நிறுத்தப்பட்டதாக வெளியரங்கப்படுத்தி தெவுந்திருவில் வந்திருப்பவர்கள் யாவரையும் உடனே அவ்விடத்தை விட்டு தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போய் விடும்படி கட்டளையிடவும், அவர்கள் இன்ன பாதையால் போகவேண்டும் என்பதாக குறிக்கவும், உதவி அரசாட்சி ஏசன்றருக்கு நியாய முறைப்படி அதிகாரமுண்டு.

2. எவராவது தொற்று நோய், பரப்பும் நோய், அல்லது பெருவாரி நோயால் வருந்துபவர், தெவுந்தருவுக்குச் செல்லக்கூடாது.

3. எவராவது தன்னுடன் தொற்று நோய், பரப்பும் நோய், அல்லது பெருவாரி நோயால் வருந்துபவரை தெவுந்திருவுக்குக் கூட்டிக்கொண்டு போகவும், அல்லது அப்படியானவரைத் தெவுந்திருவுக்குச் செல்லுகிறதற்கு உதவி செய்யவும் தூண்டவும் கூடாது.

4. தொற்று நோய், பரப்பும் நோய், அல்லது பெருவாரி நோயால் பீடிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும், அல்லது அவ்வித நோய் உள்ளவரென்று அறியப்பட்ட ஒருவருடன் கூடயிருந்த ஒவ்வொருவரும் சுகாதாரச் சோதனைகாரருக்கு அல்லது வயித்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவர்களில்லாத நேரத்தில் தெவுந்திருவிலிருக்கும் பொலிஸ் தலைமை உத்தியோகஸ்தருக்கு உடனேயே அறிவிக்க வேண்டும்.

5. (1) எவ்விதமாவது விபரிக்கக்கூடிய எப்பொருளையாவது தெவுந்திருவில் உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சுகாதார சங்கத் தலைவரால், இதற்கென்று நியமிக்கப்படாத இடத்தில் விற்பனைக்கு வைத்திருக்கக்கூடாது.

(2) சுகாதாரச் சோதனைக்காரரால் அல்லது வயித்திய உத்தியோகஸ்தரால் அல்லது இவர்களில்லாத நேரம் டிஸ்திறிக்கு முதலியாரால் அல்லது பொலிஸ் தலைவரால் இறைச்சி, சாப்பாடு, எவ்வகையான குடிவகைகளையும் யாரும் விற்கக்கூடாது.

(3) 2 ம் பிரிவின்படி உண்ண ஏற்காதென்று தள்ளும் இறைச்சி, சாப்பாடு, குடிகளைப் பறித்து அழிவுசெய்வது எந்தப் பொலிஸ் வேலைக்காரருக்கோ அல்லது சுகாதாரச் சோதனைக்காரருக்கோ நீதிக்குள்ப்பட்ட செய்கையாகும்.

6. (1) எல்லாச் சாப்பாட்டுக் கடைகளும், தேனீர், கோப்பி நீர்க்கடைகளும் சுத்தமாகவும் சுகாதாரத்திற் கேற்ற முறையிலும் இருக்கவேண்டும்.

(2) எல்லாப் பலகாரங்கள், இனிப்புப் பண்டங்கள் சமைத்த உணவுப் பொருட்கள் விற்பனைக்கென்று வெளியில் வைப்பன, தகுதியாய் அமைத்த ஈ நுளையாத கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்க வேண்டும்.

(3) கழிவு தேயிலையோ, கோப்பியோ, பாலோ, உணவுக்கழிவோ, சமையற்கழிவுப் பொருளோ அல்லது வேறெவ்வித கழிவுப் பொருளோ நிலத்தில் எறியக்கூடாது. இவ்வித எல்லாக் கழிவுப் பொருட்களும் கீழ் விபரிக்கும் விதமான கொள்கலத்தில் (பெட்டியில்) சேர்த்துவைத்து எந்த நேரத்திலும் சுகாதாரப் பகுதியாரால் அப்புறப்படுத்தப்பட ஆயித்தமாயிருக்க வேண்டும்.

(4) விற்பனைக்கோ அல்லது வியாபாரஞ்செய்வதற்கோ உபயோகிக்கப்படும் ஒவ்வொரு கட்டடமும் கொட்டிலும், இடமும், லோகத்தால் அல்லது மரத்தால் செய்யப்பட்டு 4½ கன அடிக்குமேல் உள்ளிடமுள்ள ஊத்தைக் கொள்கலமுடையதாயிருக்க வேண்டும். இந்தக் கட்டடம், கொட்டில் அல்லது இடத்தில் சேரும் கழிவுபொருட்கள் சொல்லப்பட்ட ஊத்தை கொள்ளத்தில் இடப்பட்டு, ஊத்தைப்பொருள் உட்போட அல்லது வெளியில் எடுக்கத் திறக்கும் நேரமல்லா மற்று நேரமெல்லாம் லோகம் அல்லது மர மூடியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

7. (1) (a) தங்காலை—மாத்தறைப் பெருந் தெருவிலிருக்கும் பக்கக் கானிலிருந்தும் தேவாலயத்துக்குப் போகும் குறுக்குத் தெருவுக்கு மிடையில் 12 அடி இடத்திற்குட்பட அல்லது (b) யாத்திரிகர்களுக்கு இடங் கொடுக்கவும் அல்லது இரதங்கள் நிற்பாட்டவும் உதவி அரசாட்சி ஏசன்றரால் பகிரங்கித்து வைக்கப்பட்ட எல்லைக்குட்படவும் யாராயினும் யாத்திரைக்கென்று ஒரு கொட்டகை அல்லது கட்டடம் ஸ்தாபிக்கக்கூடாது.

(2) எவ்விதமாவது விபரிக்கக்கூடிய எப்பொருளையாவது (1) (a) பிரிவின் குறிக்கப்பட்ட இடங்களுக்குள் விற்பனைக்கு வைத்திருக்கக்கூடாது.

8. யாத்திரிகர்களுக்கு இடங்கொடுக்கும் நிலங்களின் சொந்தக்காரர்களும் குத்தகைக்காரர்களும்—

(1) பத்து நாட்களுக்குட்படவாலும் யாத்திரை தொடங்குமுந்தி தகுதியான கக்கூசுகளின் படங்களேயும் அளவுகளேயும் அனுமதிக்கு உதவி அரசாட்சி ஏசன்றருக்கு அல்லது சுகாதாரச் சங்கத் தலைவருக்கு அனுப்பவேண்டும்;

(2) உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சுகாதாரச் சங்கத் தலைவரால் அனுமதிக்கப்பட்ட பிரகாரம் கக்கூசின் இடத்தை வைக்க வேண்டும் ;

(3) உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சுகாதாரச் சங்கத் தலைவரால் அனுமதிக்கப்பட்ட சாதி நெருப்புத் தண்ணிரை, அல்லது தும்புத் தூளை அல்லது மணலை கொடுக்கப் பொறுப்புடையராவார்கள் ;

(4) நாளுக்கு இருமுறை கக்கூசு கழுவ துப்பரவாக்கச் செய்விக்கவும் ;

(5) நாளுக்கு ஒரு முறையாகுதல் கஞ்சல்களை, ஊத்தைகளை, சாணிகளை அல்லது எவ்வித கழிவு பொருட்களேயும் சேர்த்து எடுத்து உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சுகாதாரச் சங்கத்தலைவரால் நியமிக்கப்பட்ட இடத்தில் சுடவோ அல்லது தாட்கவோ செய்யவும் வேண்டும்.

9. எவராயினும் (a) உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சுகாதார சங்கத் தலைவரால், ஒரு அதற்கு என்று குறிக்கப்படாத இடத்தில் அல்லது, (b) சொந்தக்காரர்களால் அல்லது குத்தகைக்காரர்களால் யாத்திரிகர்களுக்கென்று நிலங்கொடுத்திருக்கும் இடங்களில் கக்கூசு இல்லாத இடத்தில் மலசலங்களிக்க இடமாகப் பாவிக்கக்கூடாது.

10. இந்தப் பிரமாணங்களில் " யாத்திரை " என்னும் சொல்லின் கருத்து யாதெனில், 1939 ம் ஆண்டு ஜுலை மாதம் 28 ந் திகதி துவக்கம் ஓக்கஸ்ட் மாதம் 8 ந் திகதி வரையும் தெவுந்தற ஸ்ரீ விஷ்ணு மஹா தேவாலயில் நடக்கும் திருவிளாவைக் கருதி உள்ள யாத்திரை.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.

நி. 2,068 (மாத்தளை).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஷூ (ஜுலை) ஆடிமீ 21 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஷூ (மே) வைகாசிமீ 23 ந் தேதியிலன்று மாத்தளைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். எச். டீ. மேன்டேர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டவர்கள், மாத்தளை.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மாத்தளை உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் சர்வேயர் ஜெனறல் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுகுள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணத்தில், மாத்தளை டிஸ்திறிக்கில், மாத்தளை தென் பிரிவில் கொஹொன்சியா பத்துவில் வடேமட என்னும் கிராமத்திலுள்ள கீழ்க்கண்ட காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் இல. 8,185.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 13 | சகறலேவஞத்த (வயலுக்கு விடப்பட்ட நிலம்) .. | 0 | 1 | 2 |
| 14 | புடேடியகஹமுலஹேன .. .. | 0 | 1 | 32 |
| | | 0 | 2 | 34 |

எல்லைகளாவன : வடக்கு-மகுலேமடக் கிராம எல்லை; கிழக்கு-பிந்துவாவும் மறுபேரும் உரித்தாடும் பஹலகெதறவத்தை ; தெற்கு-குருணகலிலிருந்து மாத்தளைக்குப் போகும் கன்சபாவாப் பாதை ; மேற்கு-பதின்கொல்லைக் கிராம எல்லை.

II.—பிரதமபடம் இல. 8,185.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 15 | பன்சலகாவஹேனவும் வெலிஹின்னேஹேனவும் .. | 2 | 3 | 11 |
| 16 | டெல்கஹமுலவத்தை .. .. | 0 | 1 | 18 |
| 17 | டெல்கஹமுலஹேன .. .. .. | 0 | 2 | 5 |
| 18 | ஷை (வயல் நீளம் விடப்பட்ட நிலம்).. | 0 | 0 | 16 |
| 19 | ஷை .. .. .. | 0 | 1 | 13 |
| | | 4 | 0 | 23 |

(குருணக்கலிலிருந்து மாத்தளைக்குப் போகும் கன்சபாவாப் பாதை புற நீங்கலாக).

எல்லைகளாவன : வடக்கு-கிந்துல்வத்தைக் கோயிற் பாதுகாவலர் உரித்தாடும் பன்சலவத்தையும், குருணக்கலிலிருந்து மாத்தளைக்குப் போகும் கன்சபாவாப் பாதையும், பிந்துவாவும் மறுபேரும் உரித்தாடும் பஹலகெதவத்தையும், போதியாவும் பந்தியாவும் உரித்தாடும் வடேமடக் கும்புருவும் ; கிழக்கு-பந்தியாவும் மறுபேரும் உரித்தாடும் பஹலகெதறவத்தையும் பந்தியாவும் மறுபேரும் உரித்தாடும் உடகஹவத்தையும் ; தெற்கும் மேற்கும்-பதின்கொல்லைக் கிராம ஊரெல்லை.

III.—பிரதமபடம் இல. 8,185.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 20 | வெலிஹின்னேஹேனயாய .. .. | 0 | 1 | 25 |
| 21 | டுனகஹமுலவத்தை .. .. .. | 0 | 2 | 5 |
| 22 | ஷை .. .. .. | 0 | 0 | 35 |
| 23 | போகஹமுலஹேன, வெலிஹின்னேஹேன்யாயவும், கெந்தகொல்லஹேனவும் .. .. | 25 | 3 | 17 |
| 25 | கலபோலவத்தை .. .. .. | 0 | 2 | 15 |
| 26 | வடேமடஉடகெதறவத்தை .. .. | 0 | 2 | 18 |
| 28 | வெலிஹின்னேவத்தை .. .. | 1 | 0 | 11 |
| 29 | ஷை (கன்சபாவ ரோட்டுக்கு விடப்பட்ட நிலம்) | 0 | 0 | 1 |
| 30 | நுகேமுலதென்னேடெல்கஹமுலவத்தை (கன்சபாவ ரோட்டுக்கு விடப்பட்ட நிலம்). .. .. | 0 | 0 | 19 |
| 31 | நுகேமுலதென்னேதெல்கஹமுலவத்தையும், உடகெதறவத்தையும் .. .. .. | 0 | 3 | 11 |
| 32 | கும்புறேவனத்த (வயல் நீளம் விடப்பட்ட நிலம்) .. | 0 | 0 | 7 |
| 33 | கும்புறேபில்லாவை ( ஷை ) .. | 0 | 1 | 26 |
| 34 | நுகேமடகும்புறேவனத்த ( ஷை ) .. | 0 | 3 | 15 |
| 36 | உடகம்மடேஹேன ( ஷை ) .. | 0 | 0 | 37 |
| | | 31 | 3 | 2 |

(குருணகலிலிருந்து மாத்தளைக்குப்போகும் கன்சபாவப் பாதை புறநீங்கல்).

எல்லைகளாவன : வடக்கு-பண்டியாவும் மறுபேரும் உரித்தாடும் உடகஹாவத்தையும், புசும்பாவும் கிரியாவும் உரித்தாடும் டுன்கஹாமுலவத்தையும், பண்டியாவும் மறுபேரும் உரித்தாடும் கல்லிண்டகஹவத்தையும், கண்டுஞவும் மறுபேரும் உரித்தாடும் ஹீனகஹாமுலவத்தையும், தென்னையும் மறுபேரும் உரித்தாடும் தெலம்புகஹமுலவத்தையும், பாலயாவும் மறுபேரும் உரித்தாடும் கொறகஹாமுலவத்தையும், றன்கிரு உரித்தாடும் கொறக்கஹாமுலவ்த்தையும், 8,185 ம் பிரதமபடத்திலுள்ள 24 ம் காணித்துண்டும், கிறேங்கியும் கத்தாஞவும் உரித்தாடும் கப்புகஹாமுலவத்தையும் போதியாவும் மறுபேரும் உரித்தாடும் உடகெதறவத்தையும், பாலயாவும் மறுபேரும் உரித்தாடும் வடேமட உடகெதறவத்தையும், 8,185 ம் பிரதமபடத்திலுள்ள 27 ம் காணித்துண்டும், குருணகலிலிருந்து மாத்தளைக்குப் போகும் கன்சபாவாப் பாதையும், யு. கிரியுங்கா உரித்தாடும் கும்புறேவனத்தையும், உடகெதறவத்தையும், ஏ. லப்பயாவும் மறுபேரும் உரித்தாடும் வடேமடவலேயும், ஓவிலிகந்தைக் கிராம ஊரெல்லையும் ; கிழக்கு-ஓவிலிகந்தைக் கிராம ஊரெல்லையும், 8,185 ம் இலக்கப் பிரதமபடத்தின் 35 ம் காணித்துண்டும் ; தெற்கு-மல்லியும் மறுபேரும் உரித்தாடும் உடஹகமமடேவத்தையும், 8,185 ம் இலக்கப்படத்தின் 37 ம் துண்டும், ஓவிலிக்கந்தைக் கிராம ஊரெல்லையும் ; மேற்கு-ஓவிலிக்கந்தையினதும் பதின்கொல்லையினதும் கிராம ஊரெல்லைகள்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

வத்தலவில் சுகாதாரச் சங்கத்துச் சந்தையைத் திருத்துதற்கும் பகிரங்க கற்கூசு கட்டுதற்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 1,007. குறிச்சி—வத்தல.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1. | மல்வத்த அல்லது கோங்கஹவத்த, இறைவரி இலக்கம் 12 ன் பகுதி | தோட்டம், 30 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 3 வருஷஞ்சென்ற 1 குவாமரமும், 17 வாழை அடிகளுமுள்ளது | ஜயமுனி கர்லின் சில்வா, பற்றிக் பொன்சேகா, வத்தல | 0 | 0 | 7·20 |
| 2 | மல்வத்த அல்லது பஞ்சிகேவத்த, இறைவரி இலக்கம் 10 ன் பகுதி | தோட்டம், 30 வருஷஞ்சென்ற 1 தெனனையும், 10 வருஷஞ்சென்ற 3 கமுகுவுமுள்ளது | எச். எம். எஸ். குணசேகர, ருகம | 0 | 0 | 1·67 |
| 3 | ஷை .. .. | தோட்டத்தின் பகுதி, செய்கையில்லை .. | ஷை .. .. | 0 | 0 | 1·47 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பெசுகின்ற சகலரும் மாதாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஷூ (ஒக்கஸ்ட்) ஆவணி மாதம் 15 ந் தேதியிலன்று 9 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1939 ம் ஷூ (ஜூலை) ஆடிமீ 17 ந் வ.

ஸீ. ஈ. றிஸ்னி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

வத்தலவில் சுகாதாரச் சங்கத்து சந்தையைத் திருத்துதற்கும் பகிரங்கக் கற்கூசுக்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 1,008. குறிச்சி—மாபொலே.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | டெல்கஹவத்த இறைவரி இலக்கம் 782 ன் பகுதி | தோட்டம், 40 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 2 தென்னையுள்ளது | கே. ஸீ. எவ். டீன், மாபொலே . . | 0 | 0 | 4·6 |
| 2 | ஷை . . . . | தோட்டம், 15 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது | ஷை . . | 0 | 0 | 4·7 |
| 3 | ஷை . . . . | தோட்டம், 40 வருஷஞ்சென்ற 4 தென்னையுள்ளது | ஷை . . . . | 0 | 0 | 9·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பெசுகின்ற சகலரும் மாதாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஷூ (ஒக்கஸ்ட்) ஆவணி மாதம் 15 ந் தேதியிலன்று 9.30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1939 ம் ஷூ (ஜூலை) ஆடிமீ 17 ந் வ.

ஸீ. ஈ. றிஸ்னி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

லொளுவாகொட சனக்குடி ஏற்றத்துக்குப் போகும் பாதைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 1,012. குறிச்சி—லொளுவாகொட.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோங்கஹவத்த . . | தென்னங்காணி, 4 வருஷந்துவங்கி 8 வருஷம்வரை சென்ற 5 தென்னையுள்ளது | டொன் சார்லிஸ் அமரத்துங்க, லொளுவாகொட | 0 | 0 | 15·5 |
| 2 | ஷை . . | தென்னங் காணி, 30 வருஷந்துவங்கி 40 வருஷம்வரைசென்ற 2 தென்னையும், 20 வருஷந்துவங்கி 25 வருஷம்வரை சென்ற 2 தென்னையும், 2 வருஷஞ்சென்ற 2 தென்னங் கன்றும், 15 வருஷஞ் சென்ற 28 கமுகுவுமுள்ளது | ஷை . . . . | 0 | 0 | 18·8 |
| 3 | கெற்றகெலகஹவத்த | தென்னங்காணி, 30 வருஷந்துவங்கி 40 வருஷம்வரை சென்ற 5 தென்னையும், 20 வருஷஞ்சென்ற 3 தென்னையும், 2 வருஷந்துவங்கி 5 வருஷம்வரை சென்ற 5 தென்னங் கன்றும், 5 கமுகுவும், 1 கசுமரமும், 1 மாவும், 1 பெல்லிமரமும், 8 வருஷந்துவங்கி 15 வருஷம்வரை சென்ற 1 கல்மில்லை மரமும், 57 கமுகுவுமுள்ளது | றத்னுயக்க அப்புஹாமியலகே புஞ்சப்புஹாமி, லொளுவாகொட | 0 | 0 | 22·6 |
| 4 | அம்பகஹவத்த . . | தென்னங்காணி, 40 வருஷந்துவங்கி 50 வருஷம்வரை சென்ற 2 தென்னையும், 1 வருஷஞ்சென்ற 1 தென்னங் கன்றும், 4 வருஷஞ் சென்ற 1 கசுமரமும், கைவிடப்பட்ட ஒரு மண்கிணறுமுள்ளது | விக்கிறமசிங்ஹ சேனுயக்கக் கொர்னேலிஸ் பெறேரு, லொளுவாகொட | 0 | 0 | 5·2 |
| 5 | ஷை . . | தென்னங்காணியின் பகுதி, (செய்கையில்லை) . . . . | டொன் சார்லிஸ் அமறத்துங்ஹ, லொளுவாகொட | 0 | 0 | 2·5 |
| 6 | கேற்றகெலகஹவத்த | தென்னங்காணியின் பகுதி 10 வருஷந்துவங்கி 15 வருஷம்வரை சென்ற 6 கமுகுவுள்ளது | றத்னுயக்க அப்புஹாமிலாகே புஞ்சப்புஹாமி, லொளுவாகொட | 0 | 0 | 0·9 |
| 7 | ஷை . . | தென்னங்காணி, 3 வருஷந்துவங்கி 4 வருஷம்வரைசென்ற 1 கசுமரமும், 1 எனுமிச்சையும், 8 வருஷந்துவங்கி 10 வருஷம்வரை சென்ற 1 கல்மில்லமரமும், 1 டும்பரமரமும், 2 மிளகு கொடியும், 25 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 30 வருஷந்துவங்கி 40 வருஷம்வரைசென்ற 6 தென்னையும், 20 வருஷஞ்சென்ற 1 மாவும், 1 மீரமும், 15 வருஷஞ்சென்ற 11 கமுகுவுமுள்ளது | இலன்கம்பத்திறனலகே சுவாறிஸ் அப்பு, மேற்படி பண்டாறிஹாமி, மேற்படி மார்த்தேலிஸ் அப்பு, சுபசேகர ஆராச்சிறல்லகேறெய்டாஞேனு, டொன் சார்லிஸ் அமரத்துங்க, டொன் உவில்லியம், பொலிஸ் விதானே, லொளுவாகொடை | 0 | 0 | 22·7 |
| 8 | அம்பகஹவத்த . . | தென்னங்காணி, 15 வருஷஞ்சென்ற 14 கமுகுவும், 1 பலாவும், 25 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 30 வருஷந்துவங்கி 40 வருஷம்வரைசென்ற 1 தென்னையும், 2 வருஷந்துவங்கி 7 வருஷம்வரை சென்ற 1 மாவும், 1 புளியும், 1 இற்றுல்மரமும், 5 மிளகுக்கொடியுமுள்ளது | இலன்கம்பத்திறனலகே சேதிறிஸ் அப்புஹாமி, லொளுவாகொட | 0 | 0 | 3·9 |
| 9 | கேற்றகெலகஹவத்த | தென்னங்காணியின் பகுதி (செய்கையில்லை) யும் டேனியாவும் . . | இலன்கம்பத்திறனலகே சுவாறிஸ் அப்பு, மேற்படி பண்டாறிஹாமி, மேற்படி மார்த்தேலிஸ் அப்பு, சுபசேகர ஆராச்சிறல்லகே றெய்டாநோனு, டொன் சார்லிஸ், அமரத்துங்க, டொன் உவில்லியம், பொலிஸ் விதானே, லொளுவாகொட . | 0 | 0 | 16·2 |
| 10 | ஷை . . | தென்னங்காணி, 30 வருஷந்துவங்கி 40 வருஷம்வரைசென்ற 1 தென்னையுள்ளது | ஷை . . . . | 0 | 0 | 1 |
| 11 | ஷை . . | தென்னங்காணி, 30 வருஷந்துவங்கி 40 வருஷம்வரைசென்ற 2 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 7 கமுகுவும், 3 வருஷஞ்சென்ற 1 காட்டப்பிள் மரமுமுள்ளது | வன்னிஆச்சிக்கே ஹென்டிறிக் பொன்சேக, டொன் கார்லிஸ் அமரத்துங்க, லொளுவாகொட | 0 | 0 | 2·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி. 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஷு (ஓகஸ்ற்) ஆவணி மாதம் 16 ந் தேதியிலன்று 2 மணிக்கு மீறிகம வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி.
1939 ம் ஷு (ஜுலை) ஆடிமீ 17 ந் உ.

சீ. ஈ. றிஸ்னி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

களப்பாளுவாவ-தலங்கம றேட்டை உயர்த்துவதற்கும் அகலித்தற்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 1,018. குறிச்சி—வல்பொல.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அத்தலவலகும்புற .. | நெல்வயல், ஒரு பாலத்தின்பக்கச் சுவரின் பகுதியுள்ளது | வல்பொல முதலிகே டொன் எபிரகாம், வல்பொல முதலிகே டொன் டேவித், வல்பொல முதலிகே டொன் பப்லிஸ், வல்பொல முதலிகே பொடிஅப்புஹாமி, எல்லோரும் தலங்கம | 0 | 0 | 7·3 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. | 0 | 0 | 3·8 |
| 3 | அத்தலவலவனத்த .. | தோட்டம், 6 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது | ஷை .. .. .. | 0 | 0 | 0·7 |
| 4 | அத்தலவலகும்புற .. | நெல்வயல் .. .. | தந்திறிகே உவில்லியம், மேற்படி சைமன், மேற்படி மெகிநோனு, எல்லோரும் வல்பொல, தந்திறிகே பபிலிஸ், களுப்பளுவன | 0 | 0 | 4·7 |
| 5 | ஷை .. | நெல்வயல், ஒரு பாலத்தின்பக்கச் சுவரின் பகுதியுள்ளது | வல்பொல முதலிகே டொன் எபிரகாம், மேற்படி டொன் டேவித், மேற்படி டொன் பபிலிஸ், மேற்படி பொடிஅப்புஹாமி, எல்லோரும் தலங்கம | 0 | 0 | 1·5 |
| 6 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. | 0 | 0 | 8·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஷு (ஓகஸ்ற்) ஆவணி மாதம் 17 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1939 ம் ஷு (ஜுலை) ஆடிமீ 17 ந் உ.

எ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொக்கவலேயில் பிற்றவெல வாய்க்காலை (அலேயை) வழிமாத்துவதாகிய பகிரங்க தேவைக்கு வேண்டிய தான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 517. குறிச்சி—வேவலே.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொஹொம்பகஹ முலவத்தை | சில மூங்கில்களுள்ள வெட்டாந்தரை .. | கலக்கெதற கறங்காவ வேவலேயிலுள்ள டொன் ஜயத்திஸ வீரதுங்க | 0 | 0 | 3·11 |
| 2 | ஷை .. | இருவளமும் சிவர்க்கட்டுள்ள தண்ணீர் வாய்க்கால் | ஷை .. .. .. | 0 | 0 | 0·54 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஷு (ஓக்கஸ்ட்) ஆவணி மாதம் 11 ந் தேதியிலன்று 8½ மணிக்கு மேற்படி காணியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் மேற்படி காணிகளின் பேராற் தம்மிடமுள்ள உறுதிகளைக்கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1939 ம் ஷு (ஜுலை) ஆடிமீ 17 ந் உ.

பீ. எம். றெனிசன்,
அரசாட்சி ஏசண்டு.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.